செய்தி வெளியீட்டு எண்.954 நாள்: 9.12.2009

## செய்தி வெளியீடு – 9.12.2009
## ஐந்தாவது கட்டமாக கூடுதலாக 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு

தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை நான்கு கட்டங்களில் மொத்தம் 2 ஆயிரத்து 678 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 1 கோடியே 12 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டு இதுவரை 2 ஆயிரத்து 144 கோடியே 19 இலட்சத்து 59 ஆயிரத்து 216 ரூபாய் செலவில் 91 இலட்சத்து 06 ஆயிரத்து 741 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 5.11.2009 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 16–வது கூட்டத்தில் ஐந்தாம் கட்டமாக கூடுதலாக 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. அதற்கேற்ப உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, 6.11.2009 அன்று நாளேடுகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

இதற்கான ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை 55 நிறுவனங்கள் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தன. அவற்றில் 20 நிறுவனங்களின் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள், ஏற்கனவே அறிவித்தப்படி இன்று (09.12.2009) மாலை 3.00 மணி வரையில் தமிழ் நாடு மின்னணு நிறுவனத்தில் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அடங்கிய பெட்டி மூடி முத்திரையிடப்பட்டு, மாதிரி தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் தலைமைச் செயலகத்திற்கு உடனடியாகக் கொண்டு வரப்பட்டன.

இவ்வொப்பந்தப்புள்ளிகள், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், இத்திட்டத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு உறுப்பினர்களான மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் (திமுக), சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் திரு டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு. பூவை. மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சி.கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்), திரு. அப்துல் பாஸித்(முஸ்லிம் லீக்), திரு து. ரவிகுமார் (விடுதலை சிறுத்தைகள்), மற்றும் ஒப்பந்ததாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (09.12.2009) மாலை 4.30 மணிக்கு திறந்து ஆய்வு செய்யப்பட்டன.

இந்த முதற்கட்ட ஆய்வுக்கு பிறகு பின்வரும் நிறுவனங்கள் அடுத்த கட்டமான தொழில்நுட்ப ஆய்விற்காக (Technical Scrutiny) தெரிவு செய்யப்பட்டுள்ளன.

| வ எண் | நிறுவனங்கள் |
|---|---|
| 1. | வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் |
| 2. | கெயில் லிமிடெட் |
| 3. | டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் |
| 4. | டிக்சன் டெக்னாலஜீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் |
| 5. | ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 6. | எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் |
| 7. | மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 8. | ஜீனஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட் |
| 9. | பெல்டெக் (இந்தியா) லிமிடெட் |
| 10. | ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் |
| 11. | கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் |
| 12. | க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ் |
| 13. | சலோரா இன்டர்நேஷனல் லிமிடெட் |
| 14. | எம்.ஐ.ஆர்.சி. எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 15. | எல்.ஜி. எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 16. | பீ.ஜீ. இன்டர்நேஷனல் |
| 17. | ஸ்ரீகுமார் டிரேடிங் |
| 18. | தேவி மினரல் ரிசோர்சஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 19. | அருணாசல இம்பெக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் |
| 20. | சன்டெக் விஷன் லிமிடெட் |

தொழில்நுட்ப ஆய்வில் தகுதி பெறும் நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் (Price Bids) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மற்றும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 15/12/2009 அன்று காலை 10.30 மணிக்கு திறக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**